**ஸ்கோர்பொரோ மருத்துவமனையைப் பற்றி**

கனடாவில் பலதரப்பட்ட சமுதாய மக்கள் அதிகம் உள்ள பகுதியில் அமைந்துள்ள ஸ்கோர்பொரோ மருத்துவமனையானது (TSH) இரண்டு மருத்துவமனை வளாகங்களிலும் ஆறு துணை ஆய்விடங்களிலும் புதுமையான முறையில் உயரிய தரத்திலான நோயாளி பராமரிப்பை வழங்குகின்றது. ஸ்கோர்பொரோ மருத்துவமனை என்பது டயலைசிஸிக்கான (கூழ்ப்பிரிப்பு) பிராந்திய மையமாகும். பாலியல் வன்கொடுமைக்கு ஆளானவர்களுக்கான இதன் பராமரிப்பு மையமும் மனநல செயல்திட்டங்களும் மிகவும் புகழ் பெற்றதாகும். டொரண்டோ பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள TSH யானது, இரத்தக்குழாய் அறுவை சிகிச்சை (வஸ்குலர் சர்ஜரி), பேஸ்மேக்கர் மற்றும் கருவிழி பதித்தல் ஆகியவற்றிற்காக சுட்டியனுப்பப்படும் மையமுமாகும்.

உலகளாவிய சமுதாய மக்களுக்கு சிறந்த உடல்நலப் பராமரிப்பை அளிப்பதில் கனடாவின் முன்னனி மருத்துவமனையாக அடையாளம் காணப்படுவதே ஸ்கோர்பொரோ மருத்துவமனையின் கனவாகும். இங்கு TSH யில், நாங்கள் நம்முடைய சமுதாய மக்களின் தனித்துவமான மதம் மற்றும் பல்வேறு பண்பாட்டு பாரம்பரியத்தை அரவணைத்து ஏற்றுக்கொண்டு கொண்டாடுகிறோம். பண்பாட்டுரீதியிலான உணர்வுப்பூர்வ பராமரிப்பை அன்றாட அடிப்படையில் அளிப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

- எங்களிடம் பயிற்சிபெற்ற 150 தன்னார்வலர்களும் 48 மொழிகளில் பணியாற்றுகின்ற மொழிபெயர்ப்பாளர்களும் உள்ளனர்
- அனைத்து பணியாளர்களும் பண்பாட்டுரீதியிலான உணர்வுப்பூர்வ பராமரிப்பை அளிப்பதில் பயிற்சியைப் பெறுகின்றனர்
- நம்முடைய சமுதாயத்தில் அதிக மக்கள் தொகையில் உள்ள ஒவ்வொரு மதக் குழுவுக்கும் அனைத்து ஆன்மிக மற்றும் மத நம்பிக்கையிலான பராமரிப்பை நாங்கள் வழங்குகின்றோம்
- ஈத் திருநாள், தீபாவளி மற்றும் கிருஸ்துமஸ் போன்ற மதரீதியான முக்கிய திருநாட்களை அனைத்து பணியாளர்களும் கலந்துகொள்ளும் வகையில் நாங்கள் சிறப்பாக கொண்டாடுகிறோம்
- TSH யிலிருந்தும் நம்முடைய சமுதாயத்திலிருந்தும் பல்வேறு மத-பண்பாட்டுக் குழுக்கள் பங்கேற்கும் ஆனுவல் டைவர்சிட்டி டே எனும்

பல்வேறு மதத்தினர் ஒன்றிணையும் தினத்தை நாங்கள் வருடந்தோரும் கொண்டாடுகிறோம்

- முதுமை நோய் (Geriatric) பராமரிப்புக்கான யீ ஹாங் மையம் மற்றும் தெற்கு ஆசிய குடும்ப ஆதரவுச் சேவைகள் போன்ற பல வெளி அமைப்புகளுடனும் நாங்கள் சிறந்த முறையில் கூட்டிணைந்துள்ளோம், இவை நம்முடைய பல்வேறுபட்ட சமுதாய மக்களுக்கு சிறந்த பராமரிப்பை அளிப்பதற்கு உதவி புரிகின்றன

**வழிகாட்டுதல்கள்**

மெக்கோவன் சாலையின் வடமேற்கு மூலையில் எண். 3050, லாரன்ஸ் அவென்யூ கிழக்கு, என்ற முகவரியில் பொது வளாகம் அமைந்துள்ளது. இதன் தொலைபேசி எண் 416-438-2911 ஆகும்.

ஃபின்ச் அவென்யூவின் வடக்கில் எண்.3030, பிர்ச்மவுண்ட் சாலையில் பிர்ச்மவுண்ட் வளாகம் அமைந்துள்ளது. இதன் தொலைபேசி எண் 416-495-2400 ஆகும்.

பொது போக்குவரத்து மூலம் ஸ்கேர்பொரோ மருத்துவமனையை எளிதில் வந்தடையலாம். லாரன்ஸ் அவென்யூ, மெக்கோவன் சாலை மற்றும் பிர்ச்மவுண்ட் ரோடு ஆகிய வழித்தடங்களில் டொரண்டோ போக்குவரத்து ஆணையத்தின் பேருந்துகள் தொடர்ச்சியாக இயக்கப்படுகின்றன. பேருந்து கட்டணம் மற்றும் நேர அட்டவணை ஆகிய தகவல்களும் பல்வேறு பேருந்து வழித்தடங்களின் வரைபடங்களும் TTC யின் வலைத்தளத்தில் கிடைக்கப்பெறுகின்றனwww.ttc.ca.